ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ பெருமாள் திருமொழி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading this document.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| ⋆ | பெருமாள் திருமொழித் தனியன்கள் | 5 |
| 1 | இருளிரிய | 7 |
| 2 | தேட்டருந்திறல் | 11 |
| 3 | மெய்யில்வாழ்க்கையை | 15 |
| 4 | ஊனேறு | 17 |
| 5 | தருதுயரந்தடாயேல் | 19 |
| 6 | ஏர்மலர்ப்பூங்குழல் | 21 |
| 7 | ஆலைநீள் கரும்பு | 25 |
| 8 | மன்னு புகழ் | 29 |
| 9 | வன்தாளினிணை | 31 |
| 10 | அங்கண் நெடுமதிள் | 35 |

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெருமாள் திருமொழித் தனியன்கள் ॥

## உடையவர் அருளிச் செய்த தனியன்

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே!⋆
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்⋆- பொன்னம்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன்⋆ எங்கள்
குலசேகரன் என்றே கூறு

## மணக்கால் நம்பி அருளிச் செய்த தனியன்

ஆரம் கெடப்பரன் அன்பர் கொள்ளார் என்று⋆ அவர்களுக்கே
வாரங்கொடுகுடப் பாம்பில் கையிட்டவன்⋆ மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன்⋆ வில்லவர் கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இருளிரிய ॥

திருவரங்கப் பெருமானைக் கண்டு என்றுகொல் மகிழ்வேன் எனல்

‡இருளிரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி⋆
இனத்துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த⋆
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்⋆
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி⋆
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி⋆
திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும்⋆
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு⋆ என்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே! (1)

வாயோர் ஈரைஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த⋆
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ⋆
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல்⋆
மேன்மேலும் மிக எங்கும் பரந்த தன் கீழ்⋆
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக்⋆
கடி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மாயோனை மணத்தூணே பற்றி நின்று⋆ என்
வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே! (2)

எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி⋆ ஈரிரண்டு முகமும் கொண்டு⋆
எம்மாடும் எழிற்கண்கள் எட்டினோடும்⋆
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற⋆ செம் பொன்
அம்மான் தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற⋆
அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
அம்மான் தன் அடியிணைக் கீழ் அலர்கள் இட்டு⋆ அங்-
கடியவரோடென்றுகொலோ அணுகும் நாளே! (3)

மாவினை வாய் பிளந்துகந்த மாலை⋆ வேலை
    வண்ணணை என் கண்ணனை வன் குன்றமேந்தி⋆
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயர் ஏற்றை⋆
    அமரர்கள் தம் தலைவனை அந்தமிழின் இன்பப்-
பாவினை⋆ அவ் வடமொழியைப் பற்றற்றார்கள்⋆
    பயில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
கோவினை நா உற வழுத்தி எந்தன் கைகள்⋆
    கொய்ம்மலர் தூய் என்றுகொலோ கூப்பும் நாளே! (4)

இணையில்லா இன்னிசை யாழ் கெழுமி⋆ இன்பத்-
    தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த⋆
துணையில்லாத் தொல் மறைநூல் தோத்திரத்தால்⋆
    தொல் மலர்க்கண் அயன் வணங்கி ஓவாதேத்த⋆
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ⋆
    மதில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு⋆ என்
    மலர்ச் சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே! (5)

அளிமலர் மேல் அயன் அரன் இந்திரனோடு⋆ ஏனை
    அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும்⋆
தெளிமதி சேர் முனிவர்கள் தம் குழுவும் உந்தித்⋆
    திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும்⋆
களிமலர் சேர் பொழில் அரங்கத்துரகம் ஏறிக்⋆
    கண்வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும்⋆
ஒளிமதி சேர் திருமுகமும் கண்டு கொண்டு⋆ என்
    உள்ளமிக என்றுகொலோ உருகும் நாளே! (6)

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்ச மாற்றி⋆
    ஐம் புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம்
துறந்து⋆ இரு முப்பொழுதேத்தி எல்லையில்லாத்-
    தொல் நெறிக்கண்⋆ நிலை நின்ற தொண்டரான⋆
அறம்திகழும் மனத்தவர் தம் கதியைப் பொன்னி⋆
    அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆

நிறம் திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்⋆
    நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே! (7)

கோல் ஆர்ந்த நெடும் சார்ங்கம் கூனற் சங்கம்⋆
    கொலையாழி கொடுந்தண்டு கொற்ற ஒள் வாள்⋆
கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் வென்றிக்⋆
    கடும் பறவை இவையனைத்தும் புறம் சூழ் காப்ப⋆
சேல் ஆர்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த⋆
    திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி⋆
    வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே! (8)

தூராத மனக் காதல் தொண்டர் தங்கள்
    குழாம் குழுமித்⋆ திருப்புகழ்கள் பலவும் பாடி⋆
ஆராத மனக் களிப்போடழுத கண்ணீர்⋆
    மழை சோர நினைந்துருகி ஏத்தி⋆ நாளும்
சீர் ஆர்ந்த முழவோசை பரவை காட்டும்⋆
    திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப்⋆
    பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே! (9)

‡வன்பெரு வானகம் உய்ய அமரர் உய்ய
    மண் உய்ய⋆ மண் உலகில் மனிசர் உய்ய⋆
துன்பமிகு துயர் அகல⋆ அயர்வொன்றில்லாச்
    சுகம்வளர⋆ அகமகிழும் தொண்டர் வாழ⋆
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளும்⋆
    அணி அரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள்⋆
இன்பமிகு பெருங்குழுவு கண்டு⋆ யானும்
    இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே! (10)

‡திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத்⋆
    திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்⋆
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்⋆
    கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்⋆

குடை விளங்கு விறல் தானைக் கொற்ற ஒள் வாள்⋆
கூடலர் கோன் கொடை குலசேகரன் சொற் செய்த⋆
நடை விளங்கு தமிழ் மாலை பத்தும் வல்லார்⋆
நலந் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தேட்டருந்திறல் ॥

## அரங்கன் அடியாரது அடிமைத்திறத்தில் ஈடுபடுதல்

‡தேட்டரும் திறல் தேனினைத்⋆ தென்
அரங்கனைத்⋆ திருமாது வாழ்
வாட்டம் இல் வனமாலை மார்வனை
வாழ்த்தி⋆ மால் கொள் சிந்தையராய்⋆
ஆட்டமேவி அலந்தழைத்து⋆ அயர்-
வெய்தும் மெய்யடியார்கள் தம்⋆
ஈட்டம் கண்டிடக் கூடுமேல்⋆ அது
காணும் கண் பயன் ஆவதே (1)

தோடுலா மலர் மங்கை தோளிணை
தோய்ந்ததும்⋆ சுடர் வாளியால்⋆
நீடுமா மரம் செற்றதும்⋆ நிரை
மேய்த்ததும் இவையே நினைந்து⋆
ஆடிப்பாடி அரங்கவோ என்ற-
ழைக்கும்⋆ தொண்டர் அடிப் பொடி
ஆடநாம் பெறில்⋆ கங்கை நீர் குடைந்-
தாடும் வேட்கை⋆ என்னாவதே (2)

ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம்
கீண்டதும்⋆ முன் இராமனாய்⋆
மாறடர்த்ததும் மண் அளந்ததும்⋆
சொல்லிப் பாடி⋆ வண் பொன்னிப்பேர்
ஆறுபோல் வரும் கண்ண நீர் கொண்டு⋆
அரங்கன் கோயில் திருமுற்றம்⋆
சேறுசெய் தொண்டர் சேவடிச்⋆ செழும்
சேறென் சென்னிக்கணிவனே (3)

தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்டலும்⋆ உடன்றாய்ச்சி கண்டு⋆
ஆர்த்த தோள் உடை எம்பிரான்⋆ என்
அரங்கனுக்கடியார்கள் ஆய்⋆
நாத்தழும்பெழ நாரணா! என்ற-
ழைத்து⋆ மெய் தழும்பத் தொழு-
தேத்தி⋆ இன்புறும் தொண்டர் சேவடி⋆
ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே (4)

பொய்சிலைக் குரல் ஏற்றெருத்தம்
இறுத்துப்⋆ போரரவீர்த்த கோன்⋆
செய்சிலைச் சுடர் சூழ் ஒளித்⋆ திண்ண
மா மதிள் தென் அரங்கனாம்⋆
மெய்சிலைக் கரு மேகம் ஒன்று⋆ தம்
நெஞ்சில் நின்று திகழப் போய்⋆
மெய்சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து⋆
என் மனம் மெய் சிலிர்க்குமே (5)

ஆதி அந்தம் அனந்தம் அற்புதம்
ஆன⋆ வானவர் தம் பிரான்⋆
பாதமா மலர் சூடும் பத்தி
இலாத⋆ பாவிகள் உய்ந்திட⋆
தீதில் நன்னெறி காட்டி⋆ எங்கும்
திரிந்தரங்கன் எம்மானுக்கே⋆
காதல் செய் தொண்டர்க்கெப் பிறப்பிலும்⋆
காதல் செய்யும் என் நெஞ்சமே (6)

கார் இனம் புரை மேனி நல் கதிர்
முத்த⋆ வெண்ணகைச் செய்ய வாய்⋆
ஆர மார்வன் அரங்கன் என்னும்⋆
அரும் பெரும் சுடர் ஒன்றினைச்⋆
சேரும் நெஞ்சினர் ஆகிச் சேர்ந்து⋆
கசிந்திழிந்த கண்ணீர்களால்⋆

வாரநிற்பவர் தாளிணைக்கு⋆ ஒரு
வாரம் ஆகும் என் நெஞ்சமே (7)

மாலை உற்ற கடல் கிடந்தவன்⋆
வண்டு கிண்டு நறுந் துழாய்⋆
மாலை உற்ற வரைப் பெருந் திரு-
மார்வனை⋆ மலர்க் கண்ணனை⋆
மாலை உற்றெழுந்தாடிப் பாடித்⋆
திரிந்தரங்கன் எம்மானுக்கே⋆
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு⋆
மாலை உற்றதென் நெஞ்சமே (8)

மொய்த்துக் கண் பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப⋆ ஏங்கி இளைத்து நின்று⋆
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து⋆
ஆடிப் பாடி இறைஞ்சி⋆ என்
அத்தன் அச்சன் அரங்கனுக்கு⋆ அடி-
யார்கள் ஆகி⋆ அவனுக்கே
பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள்⋆
மற்றையார் முற்றும் பித்தரே (9)

‡அல்லி மா மலர் மங்கை நாதன்⋆
அரங்கன் மெய் அடியார்கள் தம்⋆
எல்லை இல் அடிமைத் திறத்தினில்⋆
என்றும் மேவு மனத்தனாம்⋆
கொல்லி காவலன் கூடல் நாயகன்⋆
கோழிக்கோன் குலசேகரன்⋆
சொல்லின் இந்தமிழ் மாலை வல்லவர்⋆
தொண்டர் தொண்டர்கள் ஆவரே (10)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மெய்யில்வாழ்க்கையை ॥

*அழகிய மணவாளன்பால்*
*மயல் விஞ்சிய நிலையில் எழுந்த மாற்றம்*

‡மெய்யில் வாழ்க்கையை⋆ மெய் எனக் கொள்ளும்⋆ இவ்
வையம் தன்னொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஐயனே⋆ அரங்கா! என்றழைக்கின்றேன்⋆
மையல் கொண்டொழிந்தேன்⋆ எந்தன் மாலுக்கே (1)

நூலினேர் இடையார்⋆ திறத்தே நிற்கும்⋆
ஞாலம் தன்னொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஆலியா அழையா⋆ அரங்கா! என்று⋆
மால் எழுந்தொழிந்தேன்⋆ எந்தன் மாலுக்கே (2)

மாரனார்⋆ வரி வெம் சிலைக்காட் செய்யும்⋆
பாரினாரொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஆர மார்வன்⋆ அரங்கன் அனந்தன்⋆ நல்
நாரணன்⋆ நரகாந்தகன் பித்தனே (3)

உண்டியே உடையே⋆ உகந்தோடும்⋆ இம்
மண்டலத்தொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
அண்டவாணன்⋆ அரங்கன் வன் பேய் முலை⋆
உண்ட வாயன் தன்⋆ உன்மத்தன் காண்மினே (4)

தீதில் நன்னெறி நிற்க⋆ அல்லாது செய்⋆
நீதி யாரொடும்⋆ கூடுவதில்லை யான்⋆
ஆதி ஆயன்⋆ அரங்கன் அந் தாமரைப்⋆
பேதை மா மணவாளன்⋆ தன் பித்தனே (5)

எம் பரத்தர்⋆ அல்லாரொடும் கூடலன்⋆
உம்பர் வாழ்வை⋆ ஒன்றாகக் கருதிலன்⋆

தம்பிரான் அமரர்க்கு⋆ அரங்க நகர்⋆
எம்பிரானுக்கு⋆ எழுமையும் பித்தனே (6)

எத்திறத்திலும்⋆ யாரொடும் கூடும்⋆ அச்-
சித்தந் தன்னைத்⋆ தவிர்த்தனன் செங்கண் மால்⋆
அத்தனே!⋆ அரங்கா! என்றழைக்கின்றேன்⋆
பித்தனாய் ஒழிந்தேன்⋆ எம்பிரானுக்கே (7)

பேயரே⋆ எனக்கு யாவரும்⋆ யானும் ஓர்
பேயனே⋆ எவர்க்கும் இது பேசி என்⋆
ஆயனே!⋆ அரங்கா! என்றழைக்கின்றேன்⋆
பேயனாய் ஒழிந்தேன்⋆ எம்பிரானுக்கே (8)

‡அங்கை ஆழி⋆ அரங்கன் அடியிணை⋆
தங்கு சிந்தைத்⋆ தனிப் பெரும் பித்தனாய்க்⋆
கொங்கர் கோன்⋆ குலசேகரன் சொன்ன சொல்⋆
இங்கு வல்லவர்க்கு⋆ ஏதம் ஒன்றில்லையே (9)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# || ஊனேறு ||

திருவேங்கட மலைத் தொடர்பு வேண்டல்

‡ஊனேறு செல்வத்து⋆ உடற்பிறவி யான் வேண்டேன்⋆
ஆனேறேழ் வென்றான்⋆ அடிமைத் திறம் அல்லால்⋆
கூனேறு சங்கம் இடத்தான்⋆ தன் வேங்கடத்துக்⋆
கோனேரி வாழும்⋆ குருகாய்ப் பிறப்பேனே (1)

ஆனாத செல்வத்து⋆ அரம்பையர்கள் தற் சூழ⋆
வான் ஆளும் செல்வமும்⋆ மண் அரசும் யான் வேண்டேன்⋆
தேன் ஆர் பூஞ்சோலைத்⋆ திருவேங்கடச் சுனையில்⋆
மீனாய்ப் பிறக்கும்⋆ விதி உடையேன் ஆவேனே (2)

பின்னிட்ட சடையானும்⋆ பிரமனும் இந்திரனும்⋆
துன்னிட்டு புகல் அரிய⋆ வைகுந்த நீள் வாசல்⋆
மின் வட்டச் சுடராழி⋆ வேங்கடக்கோன் தான் உமிழும்⋆
பொன் வட்டில் பிடித்துடனே⋆ புகப் பெறுவேன் ஆவேனே (3)

ஒண் பவள வேலை⋆ உலவு தண் பாற்கடலுள்⋆
கண் துயிலும் மாயோன்⋆ கழலிணைகள் காண்பதற்கு⋆
பண் பகரும் வண்டினங்கள்⋆ பண் பாடும் வேங்கடத்துச்⋆
செண்பகமாய் நிற்கும்⋆ திருவுடையேன் ஆவேனே (4)

கம்பமத யானை⋆ கழுத்தகத்தின் மேல் இருந்து⋆
இன்பமரும் செல்வமும்⋆ இவ் அரசும் யான் வேண்டேன்⋆
எம் பெருமான் ஈசன்⋆ எழில் வேங்கட மலை மேல்⋆
தம்பகமாய் நிற்கும்⋆ தவம் உடையேன் ஆவேனே (5)

மின்னனைய நுண்ணிடையார்⋆ உருப்பசியும் மேனகையும்⋆
அன்னவர்தம் பாடலொடும்⋆ ஆடல் அவை ஆதரியேன்⋆
தென்ன என வண்டினங்கள்⋆ பண் பாடும் வேங்கடத்துள்⋆
அன்னனைய பொற்குவடாம்⋆ அருந்தவத்தன் ஆவேனே (6)

வான் ஆளும் மா மதி போல்⋆ வெண் குடைக்கீழ்⋆ மன்னவர் தம்
    கோன் ஆகி வீற்றிருந்து⋆ கொண்டாடும் செல்வறியேன்⋆
தேனார் பூஞ்சோலைத்⋆ திரு வேங்கட மலை மேல்⋆
    கானாறாய்ப் பாயும்⋆ கருத்துடையேன் ஆவேனே (7)

பிறை ஏறு சடையானும்⋆ பிரமனும் இந்திரனும்⋆
    முறையாய பெரு வேள்விக்⋆ குறை முடிப்பான் மறை ஆனான்⋆
வெறியார் தண் சோலைத்⋆ திரு வேங்கடமலை மேல்⋆
    நெறியாய்க் கிடக்கும்⋆ நிலை உடையேன் ஆவேனே (8)

‡செடியாய் வல்வினைகள் தீர்க்கும்⋆ திருமாலே⋆
    நெடியானே! வேங்கடவா!⋆ நின் கோயிலின் வாசல்⋆
அடியாரும் வானவரும்⋆ அரம்பையரும் கிடந்தியங்கும்⋆
    படியாய்க் கிடந்து⋆ உன் பவளவாய் காண்பேனே (9)

உம்பர் உலகாண்டு⋆ ஒரு குடைக்கீழ் உருப்பசிதன்⋆
    அம்பொற் கலை அல்குல்⋆ பெற்றாலும் ஆதரியேன்⋆
செம் பவள வாயான்⋆ திருவேங்கடம் என்னும்⋆
    எம்பெருமான் பொன்மலை மேல்⋆ ஏதேனும் ஆவேனே (10)

‡மன்னிய தண் சாரல்⋆ வட வேங்கடத்தான் தன்⋆
    பொன்னியலும் சேவடிகள்⋆ காண்பான் புரிந்திறைஞ்சி⋆
கொன்னவிலும் கூர்வேல்⋆ குலசேகரன் சொன்ன⋆
    பன்னிய நூல் தமிழ் வல்லார்⋆ பாங்காய பத்தர்களே (11)

‖ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ தருதுயரந்தடாயேல் ‖

## விற்றுவக் கோட்டம்மானையே வேண்டி நிற்றல்

‡தருதுயரம் தடாயேல்⋆ உன் சரண் அல்லால் சரண் இல்லை⋆
விரை குழுவு மலர்ப் பொழில் சூழ்⋆ விற்றுவக்கோட்டம்மானே⋆
அரிசினத்தால் ஈன்ற தாய்⋆ அகற்றிடினும்⋆ மற்றவள் தன்
அருள் நினைந்தே அழும் குழவி⋆ அதுவே போன்றிருந்தேனே (1)

கண்டார் இகழ்வனவே⋆ காதலன் தான் செய்திடினும்⋆
கொண்டானை அல்லால்⋆ அறியாக் குலமகள் போல்⋆
விண் தோய் மதிள் புடை சூழ்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ நீ
கொண்டாளாயாகிலும்⋆ உன் குரைகழலே கூறுவனே (2)

மீன் நோக்கும் நீள் வயல் சூழ்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ என்
பால் நோக்காய் ஆகிலும்⋆ உன் பற்றல்லால் பற்றில்லேன்⋆
தான் நோக்காது⋆ எத்துயரம் செய்திடினும்⋆ தார் வேந்தன்
கோல் நோக்கி வாழும்⋆ குடி போன்றிருந்தேனே (3)

வாளால் அறுத்துச் சுடினும்⋆ மருத்துவன்பால்⋆
மாளாத காதல்⋆ நோயாளன் போல் மாயத்தால்⋆
மீளாத் துயர் தரினும்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ நீ
ஆளா உனதருளே⋆ பார்ப்பன் அடியேனே (4)

வெங்கண் திண் களிறடர்த்தாய்⋆ விற்றுவக்கோட்டம்மானே⋆
எங்குப் போய் உய்கேன்⋆ உன் இணையடியே அடையலல்லால்⋆
எங்கும் போய்க் கரை காணாது⋆ எறி கடல்வாய் மீண்டேயும்⋆
வங்கத்தின் கூம்பேறும்⋆ மாப் பறவை போன்றேனே (5)

செந்தழலே வந்து⋆ அழலைச் செய்திடினும்⋆ செங்கமலம்
அந்தரம் சேர்⋆ வெங்கதிரோற்கல்லால் அலராவால்⋆
வெந்துயர் வீட்டாவிடினும்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ உன்
அந்தமில் சீர்க்கல்லால்⋆ அகம் குழைய மாட்டேனே (6)

எத்தனையும் வான் மறந்த⋆ காலத்தும் பைங்கூழ்கள்⋆
மைத்தெழுந்த மா முகிலே⋆ பார்த்திருக்கும் மற்றவை போல்⋆
மெய்த் துயர் வீட்டாவிடினும்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ என்
சித்தம் மிக உன்பாலே⋆ வைப்பன் அடியேனே (7)

தொக்கிலங்கி யாறெல்லாம்⋆ பரந்தோடித்⋆ தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க⋆ மாட்டாத மற்றவை போல்⋆
மிக்கிலங்கு முகில் நிறத்தாய்⋆ விற்றுவக்கோட்டம்மா⋆ உன்
புக்கிலங்கு சீர் அல்லால்⋆ புக்கிலன் காண் புண்ணியனே (8)

நின்னையே தான் வேண்டி⋆ நீள் செல்வம் வேண்டாதான்⋆
தன்னையே தான் வேண்டும்⋆ செல்வம் போல் மாயத்தால்⋆
மின்னையே சேர் திகிரி⋆ விற்றுவக்கோட்டம்மானே⋆
நின்னையே தான் வேண்டி⋆ நிற்பன் அடியேனே (9)

‡விற்றுவக்கோட்டம்மா⋆ நீ வேண்டாயே ஆயிடினும்⋆
மற்றாரும் பற்றில்லேன் என்று⋆ அவனைத் தாள் நயந்த⋆
கொற்றவேல் தானைக்⋆ குலசேகரன் சொன்ன⋆
நற்றமிழ் பத்தும் வல்லார்⋆ நண்ணார் நரகமே (10)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏர்மலர்ப்பூங்குழல் ॥

## ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கல்

‡ஏர் மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர்⋆
எனைப் பலர் உள்ள இவ்வூரில்⋆ உன்றன்
மார்வு தழுவுதற்கு⋆ ஆசையின்மை
அறிந்தறிந்தே உன்றன் பொய்யைக் கேட்டு⋆
கூர் மழை போல் பனிக் கூதல் எய்திக்⋆
கூசி நடுங்கி யமுனை யாற்றில்⋆
வார் மணல் குன்றில் புலர நின்றேன்⋆
வாசுதேவா! உன் வரவு பார்த்தே (1)

கொண்டை ஒண் கண் மடவாள் ஒருத்தி⋆
கீழை அகத்துத் தயிர் கடையக்-
கண்டு⋆ ஒல்லை நானும் கடைவன் என்று⋆
கள்ள விழியை விழித்துப் புக்கு⋆
வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ⋆
வாண்முகம் வேர்ப்பச் செவ்வாய்த் துடிப்ப⋆
தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்⋆
தாமோதரா! மெய் அறிவன் நானே (2)

கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக்⋆
கடைக்கணித்து⋆ ஆங்கே ஒருத்தி தன்பால்
மருவி மனம் வைத்து⋆ மற்றொருத்திக்-
குரைத்து⋆ ஒரு பேதைக்குப் பொய் குறித்து⋆
புரிகுழல் மங்கையொருத்தி தன்னைப்-
புணர்தி⋆ அவளுக்கும் மெய்யன் அல்லை⋆
மருதிறுத்தாய் உன் வளர்த்தியூடே⋆
வளர்கின்றதால் உன்றன் மாயை தானே (3)

தாய் முலைப் பாலில் அமுதிருக்கத்⋆
 தவழ்ந்து தளர் நடை இட்டுச் சென்று⋆
பேய் முலை வாய்வைத்து நஞ்சை உண்டு⋆
 பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய்⋆
ஆய்மிகு காதலோடு யான் இருப்ப⋆
 யான் விட வந்த என் தூதியோடே⋆
நீ மிகு போகத்தை நங்குகந்தாய்⋆
 அதுவும் உன் கோரம்புக்கேற்கும் அன்றே (4)

மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு⋆
 வீங்கிருள் வாய் என்றன் வீதியூடே⋆
பொன்னொத்த ஆடை குக்கூடலிட்டுப்⋆
 போகின்ற போது நான் கண்டு நின்றேன்⋆
கண்ணுற்றவளை நீ கண்ணாலிட்டுக்⋆
 கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன்⋆
என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய்⋆
 இன்னம் அங்கே நட நம்பி! நீயே (5)

மற் பொரு தோள் உடை வாசுதேவா⋆
 வல்வினையேன் துயில் கொண்டவாறே⋆
இற்றை இரவிடை ஏமத்தென்னை⋆
 இன்னணை மேல் இட்டகன்று நீ போய்⋆
அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும்⋆
 அரிவையரோடும் அணைந்து வந்தாய்⋆
எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்⋆
 எம்பெருமான்! நீ எழுந்தருளே (6)

பையரவின் அணைப் பள்ளியினாய்⋆
 பண்டையோம் அல்லோம் நாம்⋆ நீ உகக்கும்
மையரி ஒண் கண்ணினாரும் அல்லோம்⋆
 வைகி எம் சேரி வரவொழி நீ⋆
செய்ய உடையும் திருமுகமும்⋆
 செங்கனி வாயும் குழலும் கண்டு⋆

பொய் ஒரு நாள் பட்டதே அமையும்⋆
    புள்ளுவம் பேசாதே போகு நம்பீ (7)

என்னை வருக எனக் குறித்திட்டு⋆
    இனமலர் முல்லையின் பந்தர் நீழல்⋆
மன்னி அவளைப் புணரப் புக்கு⋆
    மற்றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய்⋆
பொன்னிற ஆடையைக் கையில் தாங்கிப்⋆
    பொய் அச்சம் காட்டி நீ போதியேலும்⋆
இன்னம் என் கையகத்தீங்கொரு நாள்⋆
    வருதியேல் என் சினம் தீர்வன் நானே (8)

மங்கலநல் வனமாலை மார்வில்
    இலங்க⋆ மயில் தழைப் பீலி சூடி⋆
பொங்கிள ஆடை அரையில் சாத்திப்⋆
    பூங்கொத்துக் காதில் புணரப்பெய்து⋆
கொங்குநறுங்குழலார்களோடு⋆
    குழைந்து குழல் இனிதூதி வந்தாய்⋆
எங்களுக்கே ஒரு நாள் வந்தூத⋆
    உன் குழலின் இசை போதராதே (9)

‡அல்லி மலர்த் திருமங்கை கேள்வன்
    தன்னை நயந்து⋆ இள ஆய்ச்சிமார்கள்⋆
எல்லிப் பொழுதினில் ஏமத்தூடி⋆
    எள்கி உரைத்த உரையதனைக்⋆
கொல்லி நகர்க்கிறை கூடற்கோமான்⋆
    குலசேகரன் இன்னிசையில் மேவிச்⋆
சொல்லிய இன் தமிழ் மாலை பத்தும்⋆
    சொல்ல வல்லார்க்கில்லை துன்பந் தானே (10)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆலைநீள் கரும்பு ॥

சேய் வளர் காட்சியின் சீரை யசோதை போல்
தாய் தேவகி பெறாத் தாழ்வெண்ணிப் புலம்பல்

‡ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ⋆
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ⋆
வேலை நீர் நிறத்தன்னவன் தாலோ⋆
வேழப் போதகம் அன்னவன் தாலோ⋆
ஏல வார் குழல் என்மகன் தாலோ⋆
என்றென்றுன்னை என் வாயிடை நிறையத்⋆
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத்⋆
தாயரில் கடை ஆயின தாயே (1)

வடிக் கொள் அஞ்சனம் எழுது செம் மலர்க்கண்⋆
மருவி மேல் இனிதொன்றினை நோக்கி⋆
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள்⋆
பொலியு நீர் முகில் குழவியே போல⋆
அடக்கியாரச் செஞ்சிறு விரல் அனைத்தும்⋆
அங்கையோடணைந்தானையிற் கிடந்த⋆
கிடக்கை கண்டிடப் பெற்றிலன் அந்தோ⋆
கேசவா! கெடுவேன் கெடுவேனே (2)

முந்தை நன்முறை அன்புடை மகளிர்⋆
முறை முறை தம் தம் குறங்கிடை இருத்தி⋆
எந்தையே! என்றன் குலப் பெரும் சுடரே⋆
எழு முகில் கணத்தெழில் கவரேறே⋆
உந்தை யாவன் என்றுரைப்ப⋆ நின் செங்கேழ்
விரலினும் கடைக் கண்ணினும் காட்ட⋆
நந்தன் பெற்றனன் நல்வினை யில்லா⋆
நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே (3)

களிநிலா எழில் மதி புரை முகமும்⋆
கண்ணனே! திண்கை மார்வும் திண்தோளும்⋆
தளிமலர்க் கருங்குழல் பிறை அதுவும்⋆
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த⋆
இளமை இன்பத்தை இன்றென்றன் கண்ணால்⋆
பருகு வேற்கிவள் தாயென நினைந்த⋆
அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த⋆
பாவியேன் எனதாவி நில்லாதே (4)

மருவும்நின் திருநெற்றியில் சுட்டி
அசைதர⋆ மணி வாயிடை முத்தம்
தருதலும்⋆ உன்றன் தாதையைப் போலும்⋆
வடிவு கண்டு கொண்டுள்ளமுள் குளிர⋆
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து⋆
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும்⋆
திருவிலேன் என்றும் பெற்றிலேன்⋆ எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே (5)

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா⋆
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்⋆
மண்ணில் செம் பொடி ஆடி வந்து⋆ என்றன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ⋆
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்⋆
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்⋆
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடு வினையேன்⋆
என்னை என் செய்யப் பெற்றதெம் மோயே (6)

குழகனே! என்றன் கோமளப் பிள்ளாய்⋆
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி⋆
ஒழுகுபேர் எழில் இளம் சிறு தளிர் போல்⋆
ஒரு கையால் ஒரு முலை முகம் நெருடா⋆
மழலை மென்னகை இடையிடை அருளா⋆
வாயிலே முலை இருக்க என் முகத்தே⋆

எழில்கொள் நின் திருக் கண்ணிணை நோக்கம்
    தன்னையும்⋆ இழந்தேன் இழந்தேனே (7)

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்⋆
    முகிழ் இளம் சிறுத் தாமரைக் கையும்⋆
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற் கெள்கும்
    நிலையும்⋆ வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்⋆
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்⋆
    அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும்⋆
தொழுகையும் இவை கண்ட அசோதை⋆
    தொல்லை இன்பத்திறுதி கண்டாளே (8)

குன்றினால் குடை கவித்ததும்⋆ கோலக்-
    குரவை கோத்ததும் குடமாட்டும்⋆
கன்றினால் விளவெறிந்ததும்⋆ காலால்
    காளியன் தலை மிதித்ததும் முதலா⋆
வென்றி சேர் பிள்ளை நல் விளையாட்டம்
    அனைத்திலும்⋆ அங்கென் உள்ளம் உள் குளிர⋆
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன்⋆
    காணுமாறினி உண்டெனில் அருளே (9)

வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி⋆
    வரண்டு நார் நரம்பெழக் கரிந்துக்க⋆
நஞ்சம் ஆர்தரு சுழிமுலை அந்தோ⋆
    சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய்⋆
கஞ்சன் நாள் கவர் கருமுகில் எந்தாய்⋆
    கடைப்பட்டேன் வெறிதே முலை சுமந்து⋆
தஞ்ச மேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன்⋆
    தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே (10)

‡மல்லை மா நகர்க்கிறையவன் தன்னை⋆
    வான் செலுத்தி வந்தீங்கணை மாயத்து⋆
எல்லையில் பிள்ளை செய்வன காணாத்⋆
    தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல்⋆

கொல்லி காவலன் மால் அடி முடிமேல்⋆
　　கோலமாம் குலசேகரன் சொன்ன⋆
நல்லிசைத் தமிழ் மாலை வல்லார்கள்⋆
　　நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ மன்னு புகழ் ॥

## கண்ணபுரத்தொளிர் காகுத்தன் தாலாட்டு

‡மன்னு புகழ் கௌசலை தன்⋆ மணிவயிறு வாய்த்தவனே⋆
தென் இலங்கைக் கோன் முடிகள்⋆ சிந்துவித்தாய் செம்பொன்சேர்⋆
கன்னி நன் மா மதிள் புடைசூழ்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
என்னுடைய இன்னமுதே⋆ இராகவனே! தாலேலோ! (1)

புண்டரிக மலரதன்மேல்⋆ புவனி எல்லாம் படைத்தவனே⋆
திண் திறலாள் தாடகை தன்⋆ உரம் உருவச் சிலை வளைத்தாய்⋆
கண்டவர் தம் மனம் வழங்கும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
எண்டிசையும் ஆளுடையாய்⋆ இராகவனே! தாலேலோ! (2)

கொங்கு மலி கருங்குழலாள்⋆ கோசலை தன் குலமதலாய்⋆
தங்கு பெரும் புகழ்ச்சனகன்⋆ திருமருகா தாசரதீ⋆
கங்கையிலும் தீர்த்தமலி⋆ கணபுரத்தென் கருமணியே⋆
எங்கள் குலத்தின்னமுதே⋆ இராகவனே! தாலேலோ! (3)

தாமரை மேல் அயனவனைப்⋆ படைத்தவனே⋆ தசரதன் தன்
மாமதலாய்⋆ மைதிலி தன் மணவாளா!⋆ வண்டினங்கள்
காமரங்கள் இசைபாடும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
ஏமருவும் சிலை வலவா⋆ இராகவனே! தாலேலோ! (4)

பார் ஆளும் படர் செல்வம்⋆ பரத நம்பிக்கே அருளி⋆
ஆரா அன்பிளையவனோடு⋆ அருங்கானம் அடைந்தவனே⋆
சீர் ஆளும் வரை மார்பா⋆ திருக் கண்ண புரத்தரசே⋆
தார் ஆளும் நீண் முடி⋆ என் தாசரதீ! தாலேலோ! (5)

சுற்றம் எல்லாம் பின் தொடரத்⋆ தொல் கானம் அடைந்தவனே⋆
அற்றவர்கட்கரு மருந்தே⋆ அயோத்தி நகர்க்கதிபதியே⋆
கற்றவர்கள் தாம் வாழும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
சிற்றவைதன் சொல் கொண்ட⋆ சீராமா! தாலேலோ! (6)

ஆலினிலைப் பாலகனாய்⋆ அன்றுலகம் உண்டவனே⋆
வாலியை கொன்றரசு⋆ இளைய வானரத்துக்களித்தவனே⋆
காலின்மணி கரை அலைக்கும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
ஆலிநகர்க்கதிபதியே⋆ அயோத்திமனே! தாலேலோ! (7)

மலையதனால் அணை கட்டி⋆ மதிள் இலங்கை அழித்தவனே⋆
அலை கடலைக் கடைந்து⋆ அமரர்க்கமுதருளிச் செய்தவனே⋆
கலைவலவர் தாம் வாழும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
சிலைவலவா சேவகனே⋆ சீராம! தாலேலோ! (8)

தளையவிழும் நறுங்குஞ்சித்⋆ தயரதந் தன் குல மதலாய்⋆
வளைய ஒரு சிலையதனால்⋆ மதிள் இலங்கை அழித்தவனே⋆
களைகழுநீர் மருங்கலரும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
இளையவர்கட்கருள் உடையாய்⋆ இராகவனே! தாலேலோ! (9)

‡தேவரையும் அசுரரையும்⋆ திசைகளையும் படைத்தவனே⋆
யாவரும் வந்தடிவணங்க⋆ அரங்க நகர்த் துயின்றவனே⋆
காவிரி நல்நதி பாயும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
ஏவரி வெஞ்சிலை வலவா⋆ இராகவனே! தாலேலோ! (10)

‡கன்னிநன் மா மதிள் புடைசூழ்⋆ கணபுரத்தென் காகுத்தன்
தன் அடிமேல்⋆ தாலேலோ என்றுரைத்த⋆ தமிழ் மாலை⋆
கொல் நவிலும் வேல் வலவன்⋆ குடைக் குலசேகரன் சொன்ன⋆
பன்னியநூல் பத்தும் வல்லார்⋆ பாங்காய பத்தர்களே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வன்தாளினிணை ॥

## தனயன் கான் புகத் தசரதன் புலம்பல்

‡வன்தாளின் இணை வணங்கி வளநகரம்
தொழுதேத்த⋆ மன்னன் ஆவான்
நின்றாயை⋆ அரியணை மேல் இருந்தாயை⋆
நெடுங்கானம் படரப் போகு
என்றாள்⋆ எம் இராமாவோ⋆ உனைப் பயந்த
கைகேசி தன் சொற் கேட்டு⋆
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன்⋆
நன்மகனே! உன்னை நானே (1)

வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு⋆ இருநிலத்தை
வேண்டாதே விரைந்து வென்றி⋆
மைவாய களிறொழிந்து தேரொழிந்து⋆
மாவொழிந்து வனமே மேவி⋆
நெய்வாய வேல் நெடுங்கண்⋆ நேரிழையும்
இளங்கோவும் பின்பு போக⋆
எவ்வாறு நடந்தனையெம் இராமாவோ!⋆
எம்பெருமான்! என் செய்கேனே (2)

கொல் அணை வேல் வரி நெடுங்கண்⋆ கோசலை தன்
குலமதலாய்! குனி வில் ஏந்தும்⋆
மல் அணைந்த வரைத் தோளா⋆ வல் வினையேன்
மனம் உருக்கும் வகையே கற்றாய்⋆
மெல் அணைமேல் முன் துயின்றாய் இன்றினிப் போய்⋆
வியன் கான மரத்தின் நீழல்⋆
கல் அணைமேல் கண் துயிலக் கற்றனையோ⋆
காகுத்தா! கரிய கோவே (3)

வா போகு வா இன்னம் வந்து⋆ ஒருகால்
    கண்டுபோ மலராள் கூந்தல்⋆
வேய் போலும் எழில் தோளி தன் பொருட்டா⋆
    விடையோன் தன் வில்லைச் செற்றாய்⋆
மா போகு நெடுங்கானம்⋆ வல்வினையேன்
    மனம் உருக்கும் மகனே!⋆ இன்று
நீ போக என் நெஞ்சம்⋆ இருபிளவாய்ப்-
    போகாதே நிற்கு மாறே (4)

பொருந்தார் கை வேல் நுதிபோல் பரல் பாய⋆
    மெல்லடிகள் குருதி சோர⋆
விரும்பாத கான் விரும்பி வெயில் உறைப்ப⋆
    வெம் பசிநோய் கூர⋆ இன்று
பெரும் பாவியேன் மகனே! போகின்றாய்⋆
    கேகயர்கோன் மகளாய்ப் பெற்ற⋆
அரும்பாவி சொற் கேட்ட⋆ அருவினையேன்
    என் செய்கேன்! அந்தோ! யானே (5)

அம்மா! என்றுகந்தழைக்கும்⋆ ஆர்வச்சொல்
    கேளாதே அணி சேர் மார்வம்⋆
என் மார்வத்திடை அழுந்தத் தழுவாதே⋆
    முழுசாதே மோவாதுச்சி⋆
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும்⋆
    கமலம் போல் முகமும் காணாது⋆
எம்மானை என் மகனை இழந்திட்ட⋆
    இழிதகையேன் இருக்கின்றேனே (6)

பூ மருவு நறுங்குஞ்சி புன்சடையாய்ப்-
    புனைந்து⋆ பூந் துகில் சேர் அல்குல்⋆
காமர் எழில் விழல் உடுத்துக் கலன் அணியாது⋆
    அங்கங்கள் அழகு மாறி⋆
ஏ மரு தோள் என் புதல்வன்⋆ யான் இன்று
    செலத்தக்க வனம் தான் சேர்தல்⋆

தூ மறையீர் இது தகவோ⋆ சுமந்திரனே!
    வசிட்டனே! சொல்லீர் நீரே (7)

பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனையும்⋆
    தம்பியையும் பூவை போலும்⋆
மின் பற்றா நுண்மருங்குல் மெல்லியல் என்⋆
    மருகியையும் வனத்தில் போக்கி⋆
நின் பற்றா நின் மகன்மேல் பழி விளைத்திட்டு⋆
    என்னையும் நீள் வானில் போக்க⋆
என் பெற்றாய் கைகேசீ⋆ இரு நிலத்தில்
    இனிதாக இருக்கின்றாயே (8)

முன் ஒருநாள் மழுவாளி சிலைவாங்கி⋆
    அவன் தவத்தை முற்றும் செற்றாய்⋆
உன்னையும் உன் அருமையையும் உன்மோயின்
    வருத்தமும்⋆ ஒன்றாகக் கொள்ளாது⋆
என்னையும் என் மெய்யுரையும் மெய்யாகக்-
    கொண்டு⋆ வனம் புக்க எந்தாய்⋆
நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன்⋆
    ஏழ் பிறப்பும் நெடுந் தோள் வேந்தே (9)

தேனகு மா மலர்க் கூந்தல்⋆ கௌசலையும்
    சுமித்திரையும் சிந்தை நோவ⋆
கூன் உருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட⋆
    கொடியவள் தன் சொற்கொண்டு⋆ இன்று
கானகமே மிகவிரும்பி⋆ நீ துறந்த
    வளநகரைத் துறந்து⋆ நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்⋆
    மனு குலத்தார் தங்கள் கோவே (10)

‡ஏரார்ந்த கரு நெடுமால் இராமனாய்⋆
    வனம் புக்க அதனுக்காற்றாத்⋆
தாரார்ந்த தடவரைத் தோள் தயரதன் தான்
    புலம்பிய⋆ அப்புலம்பல் தன்னை⋆

கூரார்ந்த வேல் வலவன்⋆ கோழியர்கோன்
குடைக் குலசேகரன் சொற் செய்த⋆
சீரார்ந்த தமிழ் மாலை இவை வல்லார்⋆
தீ நெறிக்கண் செல்லார் தாமே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அங்கண் நெடுமதிள் ॥

தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தில்
தொல்லிராமனாய்த் தோன்றிய கதைமுறை

‡அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும்⋆
அணி நகரத்துலகனைத்தும் விளக்கும் சோதி⋆
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி⋆
விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னைச்⋆
செங்கண் நெடுங்கரு முகிலை இராமன் தன்னைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
எங்கள் தனி முதல்வனை எம்பெருமான் தன்னை⋆
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே (1)

வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி⋆
வரு குருதி பொழிதரவன் கணை ஒன்றேவி⋆
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து⋆
வல்லரக்கர் உயிர் உண்ட மைந்தன் காண்மின்⋆
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந்தண் சோலைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த⋆
அணிமணி ஆசனத்திருந்த அம்மான் தானே (2)

செல்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்⋆
சினவிடையோன் சிலையிறுத்து மழு வாள் ஏந்தி⋆
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு⋆
வேல்வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை⋆
தெவ்வர் அஞ்சு நெடும்புரிசை உயர்ந்த பாங்கர்த்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
எவ்வரிவெம் சிலைத்தடக்கை இராமன் தன்னை⋆
இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே (3)

தொத்தலர் பூஞ்சுரிகுழல் கைகேசி சொல்லால்⋆
தொன்னகரம் துறந்து துறைக் கங்கை தன்னை⋆
பத்தி உடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்குப்⋆
பரதனுக்கு பாதுகமும் அரசும் ஈந்து⋆
சித்ரகூடத்திருந்தான் தன்னை⋆ இன்று
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற⋆
இருநிலத்தார்க்கிமையவர் நேர் ஒவ்வார் தாமே (4)

வலி வணக்கு வரை நெடுந்தோள் விராதைக் கொன்று⋆
வண் தமிழ் மா முனி கொடுத்த வரிவில் வாங்கி⋆
கலை வணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக்⋆
கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி⋆
சிலை வணக்கி மான் மரிய எய்தான் தன்னைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
தலை வணக்கிக் கை கூப்பி ஏத்த வல்லார்⋆
திரிதலால் தவமுடைத்துத் தரணி தானே (5)

தனமருவு வைதேகி பிரியல் உற்றுத்⋆
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி⋆
வனமருவு கவியரசன் காதல் கொண்டு⋆
வாலியைக் கொன்றிலங்கை நகர் அரக்கர் கோமான்⋆
சினம் அடங்க மாருதியால் சுடுவித்தானைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
இனிதமர்ந்த அம்மானை இராமன் தன்னை⋆
ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே (6)

குரை கடலை அடல் அம்பால் மறுக வெய்து⋆
குலை கட்டி மறுகரையை அதனால் ஏறி⋆
எரி நெடு வேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்⋆
இன்னுயிர் கொண்டவன் தம்பிக்கரசும் ஈந்து⋆
திருமகளோடினிதமர்ந்த செல்வன் தன்னைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆

அரசமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால்⋆
    அரசாக எண்ணேன் மற்றரசு தானே (7)

அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி⋆
    அரசெய்தி அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான்
தன்⋆ பெருந்தொல் கதைக் கேட்டு மிதிலைச் செல்வி⋆
    உலகுய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள்⋆
செம் பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்டான்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்
    பருகுவோம்⋆ இன்னமுதை மதியோம் அன்றே (8)

செறி தவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று⋆
    செழு மறையோன் உயிர் மீட்டுத் தவத்தோன் ஈந்த⋆
நிறை மணிப் பூண் அணியும் கொண்டிலவணன் தன்னைத்⋆
    தம்பியால் வான் ஏற்றி முனிவன் வேண்ட⋆
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்
உறைவானை⋆ மறவாத உள்ளந் தன்னை
    உடையோம்⋆ மற்றுறுதுயரம் அடையோம் அன்றே (9)

‡அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி⋆
    அடல் அரவப் பகையேறி அசுரர் தம்மை
வென்று⋆ இலங்கு மணி நெடுந்தோள் நான்கும் தோன்ற⋆
    விண் முழுதும் எதிர்வரத் தன் தாமம் மேவி⋆
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
என்றும் நின்றான் அவன் இவனென்றேத்தி⋆ நாளும்
    இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் நீரே (10)

‡தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்⋆
    திறல் விளங்கு மாருதியோடமர்ந்தான் தன்னை⋆
எல்லை இல் சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்-
    றது முதலாத்⋆ தன் உலகம் புக்கதீறா⋆

கொல் இயலும் படைத் தானைக் கொற்ற வொள்வாள்⋆
    கோழியர்கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த⋆
நல் இயல் இன் தமிழ்மாலை பத்தும் வல்லார்⋆
    நலம் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே (11)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥